105

உ

சிவமயம்.

**S.V. சுப்பையாபாகவதர் K.B. சுந்தராம்பாள்**
**ஆர்மோனியம் T. M. காதர்பாஷா**
**ஆர்மோனியம் A. S. இராஜப்பா, P. S. ரத்ன**
**பாய் S. R. கமலம் S. G. கிட்டப்பா**
**இவர்கள் பாடிவரும்**

# புதிய பிளேட்

# சங்கீதப் பாட்டுகள்.

முதற் பாகம்.

8 - JUL 19

**R. S. வேலாயுதம் அவர்கள்**
விருப்பத்தின்படி
**S. M. சப்பாணிபிள்ளை**
அவர்களால்
மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1930. [அணா 2

NR21
N30.
177720

உ

சிவமயம்.

S.V.சுப்பையாபாகவதர் K.B.சுந்தராம்பாள்
ஆர்மோன்யம் T. M. காதர்பாக்ஷா,
ஆர்மோன்யம் A. S. இராஜப்பா, P. S. ரத்னு
பாய், S. R. கமலம் S. G. கிட்டப்பா
இவர்கள் பாடிவரும்,

# புதிய பிளேட்
# சங்கீதப் பாட்டுகள்.

முதற் பாகம்.

R. S. வேலாயுதம் அவர்கள்
விருப்பத்தின்படி
S. M. சப்பாணி பிள்ளை
அவர்களால்

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்] 1930. [விலை அணா 2

உ

சிவமயம்.

# புதிய பிளேட்

# சங்கீதப் பாட்டுகள்.

## விநாயகர் காப்பு.

பொற்சபையிலாடும் புனிதவரன் சங்கரனார்
நற்புதல்வனான விநாயகனே — அற்புதமாய்
பத்திரசக் கீர்த்தனையைப் பாடுதற்குப் — பாருலகில்
நத்தியருள் தந்திடு மின்னாள்.

## (A. S. இராஜப்பா பாடிவரும்)

மேரே மௌலபுலா என்ற மெட்டு.

பல்லவி.

கந்தா காருண்யனே கனச் சேவலனே

அநுபல்லவி.

செந்தூரார் புண்ணியனே கொடிக்காவலனே. (க)

சரணம்.

ஆதியோட னாதியான ஐயனே முருகையனே

பொன்னே பூம்பதமே உன்னைப் போற்றினேனே
என் மேலேன் கதமே பணிந்தேற்றி னேனே

(தொகையறு)

காக்ஷி யோதக டாக்ஷி மாக்ஷி கொள்
கந்தனே சிவன் மைந்தனே
சாக்ஷி யோது மீனாக்ஷி யாள் தரு
சந்தனே பிரபந்தனே

தந்தாளாய் சரணம் இன்னம் தாமதமா
பண்கேளாய் தருணம் அசம்பா விதமா (கந்)

---

இராகம்-செஞ்சுருட்டி, புன்னாகவராளி தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1 நாத சங்கீதப் பொன் மணி மண்டப
நயனத் திடையினில் நடனங்கண்டே
நாவைமடக்கியே மேல் வாசல்
நளின மதுவருந்த அருள்வாயே

ஞான வேலா!—ஞான வேலா!!
நவமணிபதித் தொளிர் - ஞானவேலா!

2 முத்தொடு பவளமும் பச்சையு மாய்
முச்சுடரொளிமணி முழக்கமெனும்
சுத்த அற்புத தச வித நாதம்
தொனிக்குதெனக்குள் சுதிலயத்துடனே
சோதியாதே!—சோதி யாதே!!
சுதனென்னை யினிப் பரிசோதி யாதே!

3 கமலமென் மலரிதழ் மனை வாழும்
கௌரி குண்டலி துயில் கலைந்திடவே
சமரசமோன சுகா தீத
தாரகப் பிரணவச் சுழிமுனையின்
சாமகீதா!—சாமகீதா!!
தவமகரிஷிமகிழ்—சாமகீதா!

4 பஞ்சுபோல் பட்ட துன்பம் போதாதா
பாலனை வெறுப்ப துண்டோமாதா
கொஞ்சந் தயவுசெய்ய லாகாதோ
குழந்தை நான்! சொல்வதெல்லாங் கேளாதோ
கோப மாமோ!—கோப மாமோ!!
குழந்தை என்மீதில் மனஸ்தாபமோ

5 சாணத்தலை வேகாக்காலும்
சந்த்ரபுட்கரணி வெண் சாரையெனும்

போகாப் புனல் நுரை திரை நீக்கிப்
புசிக்கும் வகை எனக்குப் புகல்வாயே
போகலாமோ !—போகலாமோ!!
பொழுதெல்லாம் வீண் பொழுதாய்ப் போகலாமோ!

6 முருகவிழ் வசன செம் மலர்ப்பாதா
முகமிடிவிது வென அருள் நீதா
கருணையானந்த தவக் குருநாதா
கவலைப்படுவதெல்லாம் தெரியாதா
காதலானேன்!—காதலானேன்
கருணையா னந்தனுன்மேல் காத லானேன்!

---

## (S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்)

### (வன சிங்காரம்)

(என்ன சிங்காரமே என்ற மெட்டு)

பல்லவி.

பூங்கா வினோதமே புகழொண்ணு பிரமாதமே (பூ)

மகுடம்.

புத்திக்கும் எத்திக்கும் வினைய மிது (பூங்)
பொங்கும் எங்கும் பரிமளம்
தங்கும் துங்கம் பெரு வள (பூங்)

புனிதப்படுபவ ரினிதுற்றிடவுயர்
முனிவர்க் கருந்தவம், கனிதற்கதிநய (பூங்)

பொன்னுலகந் தன்னிலுறை யமரரும்
இன்னிலம் வாழ் மன்னர்களும் தினம் புகழ் (பூங்)

பூரிக்குமே சித்தமே மிக்கவே விவ
காரிக்குமே நித்தமே கற்கவே நவ (பூங்)

பூதலத்தினிலே மருத்துவமே மிகுத்திடு தாருகாவினே

காதலித்தினி யேசுகித்திடவே
மனத்தினிலாசை வைத்திடு (பூ)

அநுபல்லவி.

பாங்கான சோலைக் காட்க்ஷி பற்பல வற்புத
கற்பக நீதமே. (பூ)

(சரணம் மகுடம்)

நீங்கா திரவு பகல் நின்று பொழிந்திடு தென்றலும் வீச
நிபுணப்ர சங்கியைப்போல் நெஞ்சுற மிஞ்சிய கிஞ்சுறம்
தீங்குயிலாட மயில் சித்திர நற்தன மெத்தவுல்லாச [பேச
சேர்ந்த மரக்குத்திகள், செப்பிடு மத்தள மொப்புமித்தேச

திண்ண மிகிந்திடு விண்ணையளாவிடுந்தருவே தேவர்
கண்ணது கூசிடு முன்னத மேடைபோற் திருவே யெங்கும்
வண்ண மனப்படி மண்ணு குளத்தினிலுருவே காணும்
எந்தன் மனத்தையும் நண்ணி முடித்தருள் பெறவே.

இத்தரை மெச்சிடு மிச்சேமி
முத்தமிழுற்பவ நன்னேமி
சித்தமிதற்கினி தாற்பூமி
செப்பிடு இப்புவி பக்கிரிசாமி (பூங்)

---

### தெம்மாங்கு.

ஏறாத மலை மே லே
எருது ரெண்டும் தத்தளிக்க
பாராமல் கை கொடுப்பாய்
பழனி மலை ஆண்டவனே.

---

### ஆனந்த பைரவி ராகம்—தாளம் ஆதி.

#### பல்லவி.

பேயாண்டி தனைக் கண்டு நீயேண்டி மையல்கொண்டாய்
பெண்களுக் கழகா மோடி. (பே)

#### அநுபல்லவி.

மாயாண்டி சுடலையில் வாழ்வாண்டி காளிமுன்
வாதாடிச் சூதாடி வழக்காடி நிற்பாண்டி (பே)

#### சரணம்.

கள்ளப்பெண் வீட்டிலே கலந்து திரிவாண்டி
காலனைக் காலா லுதைத்துக் கொண்டாண்டி

ஊரூர்க்கூர் பிச்சைக்கு ஓடாடித் திரிவாண்டி
உற்றூர் பெற்றூரில்லை யொருவ னவன்தாண்டி (பே)

---

## K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

பல்லவி.

செந்தூர் வேலாண்டி ஆண்டி திருச் (செ)

அநுபல்லவி.

சேவை ஷேமந்தாண்டி ஆண்டி திருச் (செ)

பந்தபாசங்கடந்தா பாவலர் உண்டுவந்த
பரமகுருபரன் அருமுக சரவணன்
திருமலை முருகனு முறையொடு வருமுயர் (செ)

(சரணம் தொடர்.)

பரிமளத்துயர் அரியசொக்கர்மகிழ்
பிரியமுற்றதெற்கு வருகுமற்புதமே
படைத்த பிரணவ முகத்தனகமகிழ் (செ)

(சரணம் பல்லவி கண்ணி.)

கந்தன்கடம்பன் குகன் கன்னி வள்ளிலோலன்
கற்பனை தற்பர சாமிசொல் லற்புத
பொற்புய முற்றிடு காமி தமிழ்ப்பத (செ)

---

ராகம்-காபி—தாளம்-ஏகம்.

பல்லவி.

தாயிடத்தி லன்பிலாத ஜென்மமும் வீணே பெற்ற (தா)

அநுபல்லவி.

தாய்நாட்டிலன்பிலார்க்கு தர்மமேது கர்மமேது
பேயாய்த் திரிபவர்க்கு பெயரேது (பெ தா)

மானிலத்துமக்களெல்லாம் மகிழ்ந்திடும்நற் சோதரரே
தானேயறிந்து தாயை போற்றுவீரே (பெ தா)

ஒற்றுமையிலாத நீங்கள் உலகத்தையாள்வீரோ
கற்றுமறியாதமூடக் கசடர்களே (பெ தா)

தலைவர் வசனம்கேட்டு சாந்தமொடு அவர்க்குள்பட்டு
கலவரங்கள் செய்வதேனோ கைவிட்டு (பெ தா)

சாதிமதத்தாலே சண்டை தானேயிடும் பேதையரே
சாதியேது மதங்களேது சாற்றுவீரே (பெ தா)

தாயிம்சைசெய்யும்பூண்டு சர்க்காரை நீர்கைக்கொண்டு
காந்தியடிகளுபதேசம் மெய்கண்டு. (பெ தா)

## T. M. காதர்பாக்ஷா பாடிவரும்

கழுகுமலை குருவிகுளம் ஏலோலோ மாமா
ஏலோலோ மச்சான்
ஏமாமா ஏமச்சான்
என் சாமியே கண்டெடுத்த குண்டுமுத்து
தனனனன லலல லலலலல (கழு)

நான் ஜாதியிலும் குறத்தியல்லோ ஏலோலோ
ஏமாமா
ஏமச்சான்
என் சாமியே நான் சங்கரலிங்கம் பேத்தியல்லோ
தனனனன லலல லலலலல (கழு)

நான்பிறந்தது பேட்டையூரு ஏலோலோ
ஏமாமா
ஏமச்சான்

வளர்ந்தது வள்ளநாடு வந்தது விருதுநகர்
வயக்கவங்கநாடு தனனன லலல லலலலல (கழு)

---

இராகம்-சகாணு—தாளம்-ஆதி.

ஐயா பழனிமலை வேலா எனக்
கார்துணை சொல்லனுகூலா

தூய்யா பன்னிருகை லோலா உன்னை
ஸ்தோத்திரம் செய்தேனுமை பாலா
பெண்டுபிள்ளை ஆசைமே விட்டு
பித்தனுய்த்திரிந்தலேந்தேன் கெட்டு
எண்டிசையு முன்பாதம் தொட்டு
இருகாங் குவித்தேன் கும்பிட்டு (ஐயா)

---

(த்வாத சாந்த பதுவைபோக என்ற மெட்டு.)

பல்லவி.

குமரனே உன் அருமை பேச
கோலாகலா விஸ்வாசா
சமர ஞான தருகு மோன
தமிழ் மணங்கமழ் துலங்கும் ஞான (கு)

தொகையறு.

குருபரா யெனவரும் அருமுகா சரவண
குளிர் தெய்வயானைமகிபா
அரகரா யெனவரும் மரைமுகா திருமார்பா
அகிலம் புகழும் சண்முகா

பாட்டு

அன்பர் கொண்டாடும்பாதா ஆடுமயில்விநோதா
ஆவினங்குடி மீதுகாவடி சேவலம்புகழ் யாங்குணங்குடி (கு)

தொகையரு.

எக்காலம் வந்தெனை ரக்ஷித்தருள் வையோ
ஐங்கரன் தம்பிரானே
அய்யனே மெய்யனே துய்யனே வந்தருள்
இனிய சுப்ரமண்யனே

(பாட்டு)

கொஞ்சுந்தமிழ் மதுரகவி கொண்டாடும் பாண்டிப்பூமி
கோரும் பக்கிரி சாமி செந்தமி
ழே திருப்பரங் கோவில் அற்புத (குரு)

---

## S R. கமலம் பாடிவரும்.

பல்லவி.

காக்ஷி கண்காக்ஷியே சிங்காரமாளிகையின் (கா)

அநுபல்லவி.

ஆக்ஷியான சிற்பநூலே சாக்ஷிகாட்டுஞ்சித்ரவேலே (கா)

சரணம்

பளிங்குக்கற்களினாலே பாரச்சுவ ருயர்த்தி
பலத்த மாணிக்கதூண்கள் பந்திபந்தியாய்நிறுத்தி
பளபளப்பான நல்ல பவளவிட்டம் பொருத்தி

பத்மாராக விட்டமே லோட்டி—சுவற்றில்
பால்வயிர முத்துச் சுண்ணம் தீட்டி—அதில்
பத்திகள் வகுத்து மிகக் காட்டி—மேமேல
பத்தருக்கு பெத்தைகளை நீட்டி

பற்பலவர்ண க்ராதி
ஜப்பான் தேசத்து நீதி
உப்பரிக்கையின் கியாதி
செப்பத் தகாத சேதி (கா)

நக்ஷத்திரம்போலநல்ல காந்தலையிட்டு தொங்கமாட்டி
லஸ்தர் குளோப்புகளை நவநவமாகப்பூட்டி
லண்டன் பாரிஸிலுள்ள நாகரீகங்களைக்காட்டி

நந்தி உலகம் படைத்த பிர்மா அதை
சுற்றிலும் வரையும் ரவிவர்மா இதை
முற்றிலும் சொல்லப் போகுமோ அம்மம்மா

நாற்புரமும் ரோட்டு வார்புக்கம்பி கேட்டு
போலீஸ்பாராபீட்டு இரவு பகலாய் வேட்டு (கா)

தேசாபிமானிகளைச் சிரப்பிக்கும் மாடகூடம்
சிங்களம் சைன முதல் எங்குமில்லா விஷேடம்
சேனதிபதி கட்டு நானவித பொற் பீடம்

சீருயார்த சித்ரமணிக் கூண்டு—வட
மேருவுக்கு போகுதப்பால் நீண்டு—புஷ்பத்

தோரணங்கள் முன்முகப்பில் பூண்டு—எந்த
நேரமு முழங்குதிங்கே ப்யாண்டு
ஜொலிக்கு மிங்கிலாண்டு
துதிக்கும் பார்லிமெண்டு
தனக்கிணை யிரண்டு
தலங்களுமிங்குண்டு (கா)

வருவாய் மயிலேறி என்ற மெட்டு.

பல்லவி

மயில்வாகன மேறி வா முருகா (மயி)

அநுபல்லவி மகுடத் தொடர்ச்சி

மாசிலாத தேசுலாவி (மயி)
மகத்தவ மிலகு ஜெகத்தில் நடமிடு (மயி)
வாதுசூது யேதென்மீதுநீதபோதவேதநாயகனே (மயி)
வந்தின்பந் தந்தெந்தனை யாண்டிட (மயி)
குயில் மொழி உமையாள் குமரஷண்முகனே
கொஞ்சந்தயவு செய்வாய் தஞ்சந்தஞ்சம்நானுந்தன் (மயி)

சரணம்.

அருணகிரி பரவும் ஆபத் சகாயனே
அடிமை யெனக்கோர் வரம் அருள்கார்த்திகேயனே

சரவணபவசிவ சமாபுரீசனே
சங்கரலிங்கன் பங்கில் தங்கும் முருகேசனே (மயி

விருத்தம்.

போதரிக்கு மடியவர் தம்பிறப்பை யொழித்துப்
பெருவாழ்வும்
பேரும் கொடுக்கவரும் பிள்ளைப்
பெருமாவனனும் பேரளா, சேரா,
நிருதா குல கல கா சேவர் கொடியா,
திருச்செந்தூர் தேவா தேவர்
சிறைமீட்டு செல்வாவென்றுன்
றிருமுகத் தைப்பரா
மகிழ்ந்து மூலத்தாயார் பரவிப்
புகழ்ந்து விருப்பு
டனப்பா வா வாவென்றுனைப்போற்ற
பரிந்துமகிழ்ந்துவர வழைத்தால்,
வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே வளருங்கலபக்
குரும்பமுலை வள்ளிகணவா வருக வருகவே.

## புதிய பிளேட் சங்கீதப் பாட்டுகள்.

முதற்பாகம் முற்றிற்று.

கூடியசீக்கிரம் இதின் இரண்டாம்பாகம் வெளிவரும்.

221
11-75

உ

(இன்பானந்தம் தரும் பாடல்)

முந்துங்கள்!! வாங்குவதற்கு முந்துங்கள்!!!

சங்கரன் கோவில்த் தாலுகா கரிவலம்வந்த நல்லூரடுத்த
அடைக்கலாபுரம், கழுகுமலைமுருககருணாகரகடாக்ஷவித்வான்

சிதம்பர சுவாமிகள் இயற்றிய

பழனி

ஸ்ரீபாலதண்டபாணி பஜனாமித கீதம் விலை அணா 0—4—0

சுப்பையா அவர்கள் இயற்றிய

ஸ்ரீகந்தபிரான் ஸ்தோத்திர கானரஸ கீர்த்தனம்

முதல் பாகம் 0—2—0

ஷை இரண்டாம் பாகம் 0—2—0

சாரதா சட்டமென்னும் பால்ய விவாஹச்சிந்து 0—1—0

ஷை இரண்டாம் பாகம் 0—1—0

சகல தெய்வ வசியமாகிய மலையாள மாந்திரீக சாஸ்திரம், 8 காண்டம் 152 உபாஸனை மந்திர சக்கர பூஜைவிதியுடன் விலை 1-க்கு ரூ 1—4—0

சோதிட பெரிய சந்திர காவியம் மூலமும் விசேட உரையுடன் 0-12—0

மதுரை புதுக்குயவர் பாளையம்.

ஸ்ரீலஸ்ரீ பூ. மாரியப்ப சுவாமிகள் இயற்றிய

செந்திலாண்டவன் கீர்த்தனை, அருமையான சங்கீத பாடல்கள் விலை 0—8—0